Crl.Misc.39

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II COURT, KARUR

CC No.375/2018

| | | |
|---|---|---|
| | | Prosecution PW-3 |
| Deposition of Witness for | | Defence |
| | | Court |
| Name | : | பாஸ்கர் |
| Father's Name | : | குப்பமுத்து |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of (44 of 1969) of the day of 02.09.2025.

எதிரிகள் ஆஜர்

**<u>முதல் விசாரணை</u>**

**1)** நான் கரூர் மாவட்டம் தான்தோணிமலை. கதவு எண்.LM-399 என்ற முகவரியில் வசித்து வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து எனக்கு வரப்பெற்ற

ஒம்/-எம்.சார்லஸ் ஆல்பர்ட்

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.

அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். சுமார் 10 வருடங்களுக்கு முன்பு தேதி மாதம் ஞாபகமில்லை. ஆனால் கடந்த 2015ம் ஆண்டு திருச்சியில் நடைபெற்ற கட்சி மாநாட்டிற்காக நன்கொடை வசூல் செய்வதற்காக நான் கரூரில் இருந்தேன். அப்பொழுது இந்த வழக்கு புகாரை தாக்கல் செய்த மணி என்கின்ற நபர் என்னை அழைப்பேசியில் தொடர்பு கொண்டு தனக்கு பிரச்சனை இருப்பதாகவும் அது சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுக்க வேண்டும் என்றும் தெரிவித்தார். அப்பொழுது நானும், எனது நண்பர்களும் எனது ஸ்கார்பியோ வாகனத்தில் மணி என்பவர் வீட்டிற்கு சென்றோம். அப்பொழுது அங்கு மணியின் வீட்டின் அருகில் கும்பலாக இருந்தனர். அந்த இடத்தில் அடையாளம் தெரியாத 4, 5 நபர்கள் என்னை தகாத வார்த்தையால் பேசி என்னை அடிங்கடா என்று சத்தம் போட்டனர். சிறிது நேரத்தில் வாங்கல் காவல் நிலையத்திலிருந்து சம்பவ இடத்திற்கு காவலர்கள் வந்தனர். அப்பொழுது அங்கிருந்த நபர்கள் எனக்கு தெரியாது.

2) ஜெகநாதன் என்கிற நபர் என்மீதும் மற்றும் 7 நபர்கள் மீதும் புகார் கொடுத்ததாகவும், என்னை கைது செய்து நீதிமன்ற காவலிற்காக என்னை நீதிபதியின் மீது அழைத்து வந்தபோது நான் நீதிபதியிடம் புகார் கொடுத்தேன். யார் மீது புகார் கொடுத்தேன் என்று தற்போது ஞாபகமில்லை. ஆனால் அவர் தற்போது இறந்துவிட்டார். என்மீது தாக்கல் செய்த வழக்கில் இந்நீதிமன்றத்தால் விசாரணைக்கு வந்து என்னை விடுதலை செய்து தீர்ப்பு பகரப்பட்டது. நான் கொடுத்த புகாரின் பேரில் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையை ரத்து செய்ய கூறி தாக்கல் செய்யப்பட்ட மனுவில் நான் வழக்கறிஞராக இருப்பதாகவும் சமுதாயத்தில் ஒரு முக்கிய நபராக இருப்பதாலும் வீண் வழக்குகள் தேவையில்லை என கருதி நான் கொடுத்த புகாரினை முடித்துக்கொள்கிறேன் என தெரிவித்ததன் பேரில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையால் ரத்து செய்து உத்தரவு பகரப்பட்டது.

ஒம்/-எம்.சார்லஸ் ஆல்பர்ட்

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.

3) இந்த வழக்கு சம்பந்தமாக என்னை சாட்சியம் அளிக்க அழைப்பாணை வந்ததன் அடிப்படையில் இந்த வழக்கு சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.5 முதல் தகவல் அறிக்கை எண் 117/2015 என்மீதும் மணி என்பவர் உட்பட சில நபர்கள் மீதும் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். நானும் மணி என்பவரும் என்னுடன் வந்த 10 நபரும் 1ம் எதிரி ஜெயராமன் உட்பட மூவரை அடித்ததாக 1ம் எதிரி கொடுத்த ம.சா.ஆ. 5 ன் பேரில் இந்நீதிமன்றத்தில் CC NO.26/2017 ன் படி நடைப்பெற்ற வழக்கில் நானும் எதிரிகளும் சமரசமாக பேசி முடித்துக்கொண்டதின் பேரில் எனக்கு விடுதலை கிடைக்கப்பெற்றது என்றால் சரியல்ல.

4) **என்னிடம் காட்டப்படும் Crl.mp no.6875/2017 மனு மற்றும் வழக்கின் நாட்குறிப்பு சான்றிட்ட நகல் ம.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சாட்சி மேற்படி ஆவணத்தில் கண்டுள்ள வாசகங்கள் பற்றி தனக்கு தெரியாது என்று சாட்சியம் அளிக்கிறார். நானும் இவ்வழக்கின் மனுதாரரான மணியும் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்ட பின் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச்சென்ற போது என்னையும் மணியையும் ஒரே அறையில் வைத்து சிகிச்சை அளிக்கப்பட்டதா என்றால் இல்லை.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஓம்/—எம்.சார்லஸ் ஆல்பர்ட்

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.